# பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வலியுறுத்தல்

பெங்களூரு, பிப். 6: அரசுப் பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அந்தந்த மாநில அரசுகள் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என இலக்கியவாதியும், எழுத்தாளருமான சசி தேஷ்பாண்டே கேட்டுக் கொண்டார்.

பரிக்கிரமா மனிதநேய அறக்கட்டளை சார்பில், பெங்களூருவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசியது:

பொருளாதாரத்தில் முன்னேறியவர்கள் பெறும் கல்வியைப் போலவே ஏழை மாணவர்களுக்கும் கிடைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக, தனியார் அமைப்புகள் அரசுடன் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும்.

பள்ளிக் கல்விக் கொள்கையில் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. இந்த நிலையை மாற்றி, தேசிய அளவில் ஒரே மாதிரியான கல்வித் திட்டத்தை வகுக்க வேண்டும். இதில் மாநிலங்களுக்கு பிரச்னை இல்லாத வகையில், தங்களது தாய்மொழியைப் பயிற்றுவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெரும்பாலான அரசுப் பள்ளிகளில் பாதுகாப்பு, சுகாதாரம், சுற்றுச்சூழல் வசதிகள் மோசமடைந்துள்ளன. இதை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் பரிக்கிரமா மனிதநேய அறக்கட்டளை நிறுவனர் சுக்லா போஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.